அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :155/2016
தேதி. : 11/10/2016

**லட்ச கணக்கான தமிழக மக்களின் பிரார்த்தனையாலும், தொண்டர்களின் பிரார்த்தனையாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பூரண குணமடைந்து விரைவில் வீடு திரும்புவார்.**
**ச.ம.க நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி இரவு திடீர் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மறுநாள் காலையில் மருத்துவமனைக்கு சென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடல்நலம் குறித்து மூத்த அமைச்சர்களிடம் கேட்டறிந்தேன். மீண்டும் ஒரு வாரத்திற்கு முன்பு சென்று மக்களவை துணை சபாநாயகர் மாண்புமிகு மு.தம்பிதுரை அவர்கள் மற்றும் நிதித்துறை அமைச்சர் மாண்புமிகு ஓ.பன்னீர்செல்வம் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடல்நலம் குறித்து கேட்டறிந்தேன்.

மருத்துவமனை நிர்வாகமும் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடல்நலம் குறித்து அறிக்கையினை வெளியிட்டு வருகிறார்கள் பத்திரிகை, தொலைக்காட்சிகளிலும் நலமாக உள்ளார் என்று செய்திகள் வந்தவண்ணம் உள்ளது. இந்த நிலையில் சிலர் தமிழக அரசுஇயந்திரம் இயங்கவில்லை என்று அரசியல் ஆதாயம் தேடுகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குணமடைந்துவரும் இச்சமயத்தில் தேவையற்ற கருத்துக்களை பதிவு செய்வது வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போல் ஆகும்.

உடல்நலம் பாதிக்கப்படுவது என்பது அனைவருக்கும் இயல்பான ஒன்று. லட்சக்கணக்கான தமிழக மக்களின் பிரார்த்தனையாலும், தொண்டர்களின் பிரார்த்தனையாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பூரண குணமடைந்து விரைவில் வீடு திரும்பி தங்களது பணிகளை மேற்கொள்ளவேண்டும் என இறைவனை பிரார்த்திக்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்